# DEPOSITION OF WITNESS
# CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
# IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.98 /2008

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணக்குமார் | Father's/Husband's Name : | பெருமாள்தேவர் |
| Village | : குள்ளப்பகவுண்டன்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் வழக்குரையில் உள்ள விபரங்களையும் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். நான் MA., வரை படித்திருக்கிறேன். தாவா சொத்து சம்பந்தமாக சீனித்தேவருக்கும், தாயம்மாள் வகையறாவிற்கும் இடையே நடைபெற்ற வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் வழக்கு விபரம் அனைத்தையும் நான் கிரையம் வாங்கிய பிறகு தெரிந்து கொண்டேன். அசல் வழக்கு எண்.354/1961 என்ற வழக்கில் சீனித்தேவர் வகையறாவிற்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் கேட்டு தெரிந்துகொண்டேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தின் உரிமை சம்பந்தமான வில்லங்கம் பார்த்து தான் கிரையம் வாங்கினேன். மேற்படி அசல் வழக்கு எண்.354/1961 என்ற வழக்கை விளம்புகை மற்றும் நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி சீனித்தேவர் தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை, அவரை தான் கேட்க வேண்டும்.

2) மேற்படி வழக்கு சம்பந்தமாக ஆவணங்களை கிரையம் வாங்கும் போது பார்த்து வாங்கினேனா என்றால் அப்போது பார்க்கவில்லை, இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனது மாமனாரிடம் வழக்கு ஆவணங்களை வாங்கி பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டேன். மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல் என் கைவசம் இருக்கிறது. சீனித்தேவர் தாக்கல் செய்த வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் என்னிடம் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பாராவில் அசல் வழக்கு எண்.354/1961 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பிற்கு எதிராக தாக்கல்

செய்த திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.144/1962 என்ற மேல்முறையீட்டு வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பையும் அதற்கு மேல் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் 2ம் மேல் முறையீடு S.A.No.1023/1964 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பையும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

3) என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அசல் வழக்கு எண்.354/1961ன் Suit Extract என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அசல் வழக்கில் சீனித்தேவர் சர்வே எண்.892ல் 40 செண்ட் நிலம் மட்டும் தான் தனக்கு பாத்தியம் என்று சொல்லியிருக்கிறார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ1ன் படி சீனித்தேவர் சர்வே எண்.892 என்று குறிப்பிட்டு கிரையம் வாங்கியிருந்தாலும் நான்குமாலின்படி சர்வே எண்.880, 881 மற்றும் சர்வே எண். 892ல் மேல்பக்கம் 40 செண்ட் நிலத்தை தான் கிரையம் வாங்கியதாக மேற்படி அசல் வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமாலின்படி சர்வே எண்.892ல் கட்டுப்பட்ட சொத்தை சீனித்தேவர் கிரையம் வாங்கவில்லை என்றாலும் அதற்கு மேல்பக்கம் உள்ள சர்வே எண்.880, 881 நிலத்தை தான் கிரையம் வாங்கினார் என்றாலும் சரியல்ல, மேற்படி சர்வே எண்.880, 881 நிலங்களை ராசுத்தேவர் வகையறா ஏற்கனவே கிரையம் கொடுத்துவிட்டார்கள்.

4) சர்வே எண்.880, 881 மற்றும் சர்வே எண். 892ல் 40 செண்ட் நிலத்தை ராசுத்தேவர் வகையறா 1994ம் ஆண்டு வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி RJ டெக்ஸ்டைல்ஸ்க்கு கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சீனித்தேவருக்கும் ஒரு தரப்பினராக இருந்து தான் கையொப்பம் செய்திருக்கிறார் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு ஆமாம் என்று பதிலளித்தார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் கட்டுப்பட்ட சொத்து தாவா சொத்திற்கு மேல்பக்கம் இருக்கிறது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மேல்பக்கம் உள்ள சர்வே எண்.880, 881 மற்றும் 892ல் 40 செண்ட் ஆகிய நிலங்கள் சம்பந்தமாகத்தான் சீனித்தேவருக்கு மேற்படி வழக்குகளில் தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சர்வே எண்.892/2ல் ஒரு பகுதியை கிரையம் வாங்கினேன்.

5) வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 4 நபர்களுக்கு அந்த ஆவணத்தில் கட்டுப்பட்ட சொத்துக்களில் எந்த பாத்தியமும் இல்லை என்றாலும் 5வது நபராக குறிப்பிட்டுள்ள சீனித்தேவருக்கு தான் அந்த சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் கிழக்கு மாலாக வளர்மதி நிலத்திற்கும் சீனித்தேவரால் போடப்பட்ட 12 அடி பொதுபாதை என்று காட்டப்பட்டிருக்கிறது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு ஆமாம் என்று பதிலளித்தார். மேற்படி கிழக்கு மாலாக காட்டியுள்ள வளர்மதி நிலம் தான் இந்த வழக்கில் தாவா சொத்து என்றால் சரியல்ல, சர்வே எண்.892/2ல் வாதி எந்த நிலத்தையும் கிரையம் வாங்கவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் என்னுடைய முன் பாத்தியஸ்தரான சீனித்தேவர் தாவா சொத்து வளர்மதிக்கு பாத்தியப்பட்டது என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்றாலும் ஆனால் இந்த வழக்கில் வேண்டுமென்றே தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

6) சர்வே எண்.892/2ல் 4 ஏக்கர் 80 செண்ட் நிலத்தையும் ராசுத்தேவர் தாயம்மாள் என்பவரிடம் கடந்த 03.08.1961ம் தேதி கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல, கிரையம் வாங்கவில்லை. மேற்படி ராசுத்தேவர் கிரையம் வாங்கிய ஆவணத்தில் மேல்பக்கம் சீனித்தேவர் நிலம் என்று குறிப்பிட்டு கியைரம் வாங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ராசுத்தேவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் கடந்த 30.10.1992ம் தேதி தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, மூல ஆவணமே இல்லாமல் கிரையம் வாங்கியிருக்கிறார்கள். மேற்படி கிரையம் கொடுப்பதற்கு முன்பு தாவா சொத்திற்கு ராசுத்தேவர் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். அது UDRன்போது கொடுக்கப்பட்ட பட்டா. ராசுத்தேவர் பெயரில் இருந்த பட்டா பாஸ் புத்தகம் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பட்டாவை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேன்.

7) சீனித்தேவருக்கு மொத்தம் 6 வாரிசுகள். அவரது பெயர்கள் குணசீலன், தனபால், மணி, ரத்தினம், பேபி, இளங்கோவன். சீனித்தேவர் வகையறா எனது உறவினர்கள் என்றால் சரிதான். மேற்படி ரத்தினம் எனது மாமனாராவார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து தாவா சொத்திற்கு மேல்பக்கம்

RJ டெக்ஸ்டைல்ஸ் அனுபவத்தில் இருக்கும் இடம் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக சீனித்தேவர் வாரிசுகள் பெயரில் தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 02.11.1996 தேதியிட்ட ஆண்டிபட்டி வட்டாட்சியரின் நடவடிக்கைகள் ஆவணங்களை முறையாக பரிசீலிக்காமல் வழங்கப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல. 29.02.2016 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி தாவா சொத்தில் உரிமையோ பாத்தியமோ இல்லாத நபர்களிடமிருந்து நான் கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

8) அதேபோல எனது மனைவியும் தாவா சொத்தில் எந்த பாத்தியமும் இல்லாத நபர்களிடமிருந்து கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7, 8 வாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா சம்பந்தமான உத்தரவை எதிர்த்து தான் இறந்து போன 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த மனுக்களில் ஏற்பட்ட உத்தரவிற்கு எதிராக இந்த வழக்கில் வாதி மறுசீராய்வு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11 S.S.ராஜேஸ் என்பவர் இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவு நகல் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வில்லங்கச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ளபடி சீனித்தேவர் தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றாலும் அதற்கு மேல்பக்கம் உள்ள சொத்தை தான் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல.

9) மேற்படி வில்லங்கச் சான்றிதழில் தாவா சர்வே எண்ணான 892ல் மேல்பக்கம் 40 செண்ட் நிலத்தை தாயம்மாளிடமிருந்து ராசுத்தேவர் கிரையம் வாங்கியிருப்பதாக பதிவு இருக்கிறது என்றால் சரிதான். எனது மனைவிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதி எப்படி பாத்தியம் என்று கேட்டால் தனபால் மனைவி செல்வியிடமிருந்து கிரையம் வாங்கினார்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 04.06.2026ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me/before me in open court on 01.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.06.01 12:28:05 +0530

District Munsif,

Aundipatti.